படுகொலைகள் – பாலியல் வன்கொடுமைகள் – ஆள் கடத்தல் – சிறையிலிருந்து தப்பித்தல் – விலைவாசி உயர்வால் வெறுப்புக்கு உள்ளாகும் பிரச்சினைகளிலிருந்து

திசை திருப்பல்களின் மூலம் காலத்தைக் கடத்துவது பெரும் அரசியல் பிழை!

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, அக். 30–

திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–

கவலைக்குரிய அளவில், தமிழ்நாட்டில் அன்றாடச் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன!

மக்களின் பாதுகாப்புக்கும், நிம்மதியான வாழ்க்கைக்குமான கூழல் என்பது கேள்விக் குறியாகி நிற்கிறது.

கொலைகள், கொள்ளைகள், கடத்தல்கள், போதை மருந்து புழக்கங்கள், பாலியல் வன்கொடுமைகள் மற்றும் வரலாறு காணாத மின்வெட்டு (மயானத் தல்கூட), மக்கள் மீதான விலை வாசி ஏற்றத் தாக்குதல் (பலகாரப் பண்டங்கள் முதல் காய்கறிகள் வரை) என நாளும் வரும் செய்திகள் அச்சமூட்டுகின்றன.

வெட்டிக் கொல்வது தொடர்கதையாகி இருக்கிறது!

தலைநகரே கொலைப் பட்டணம் ஆகும் கொடுமையை நினைத்தால் உள்ளம் குமுறுகிறது.

சென்னையிலேயே அடையாறு இந்திரா நகர் பகுதியில் நேற்று (அக்டோபர் 27) பட்டப்பகலில் ஒரு கொலை நடக்கிறது. காவல்நிலையத்தில் கையெழுத்துப் போட வந்த ஒருவரை மூன்று பேர் கும்பல் வழிமறித்து வெட்டிக் கொன்றுள்ளது

அதற்கு முதல் நாள் (அக்டோபர் 26) சேலத்தில், புதுரோடு மேம்பாலம் அருகில், அய்ந்து பேர் கொண்ட கும்பல் ஒருவரை வெட்டிக் கொலை செய்கிறது.

கடந்த வாரம் (அக்டோபர் 18) சிவகங்கை மாவட்டம் ஒக்கூரில் ஒருவர் ஓட ஓட வெட்டிக் கொலை செய்யப்படுகிறார்.

கடந்த மாதம் திருவொற்றியூரில் ஒருவர், தன் உயிருக்குப் பாதுகாப்பு கோரிய 24 மணிநேரத்திற்குள் (செப்டம்பர் 9 அன்று) நடுச் சாலையில் வெட்டிக் கொலை செய்யப்படுகிறார்.

அதற்கு மூன்று நாட்களுக்கு முன்பு (செப்டம்பர் 6), த.வெ.க. நிர்வாகி ஒருவர் பெசன்ட் நகரில் மக்கள் பார்த்துக் கொண்டிருக்கும்போதே ஒரு கும்பலால் வெட்டிக் கொல்லப்படுகிறார்.

கொலை செய்யப்பட்டோர், கொலை செய்தோர் அனைவரும் குற்றப் பின்னணி கொண்டவர்கள்!

இவையெல்லாம் தற்செயலாக நடக்கும் நிகழ்வுகள் அல்ல; திடீர் கோபத்தில், ஆற்றாமையில் நடக்கும் கொலைகள் அல்ல. திட்டமிட்டு, நோட்டமிட்டு இக் கொலைகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. இவை அனைத்திலும் கொலை செய்யப்பட்டோர், கொலை செய்தோர் அனைவரும் குற்றப் பின்னணி கொண்டவர்கள். அனைவருமே, காவல்துறையினரின் கண்காணிப்புப் பட்டியலில் இருக்க வேண்டியவர்கள்.

கொலை என்பது சாதாரணமான உணர்வு வடிகாலாகிப் போனதோ என்று கவலைப்படும் அளவுக்கு, உணர்வு உந்துதலால் நடக்கும் கொலைகளும் பன்மடங்கு பெருகியுள்ளன; அன்றாடம் மீண்டும் மீண்டும் செய்திகளில் கேட்கும் கொலைச் செய்திகள் ஏதோ இயல்பான ஒன்று போல ஆக்கப்பட்டு, எதிர்க்கட்சிப் பெருந் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சொன்னதுபோல், மின்வெட்டு, அரிவாள் வெட்டு என்பவை த.வெ.க. அரசின் இரண்டு அம்சங்கள் ஆகிவிட்டன.

செய்தித்தாள்களிலும், தொலைக்காட்சிகளிலும் அன்றாடச் செய்திகளாகின்றன!

இன்னொரு புறம், செஞ்சி, இராணிப்பேட்டை, சாத்தான்குளம் என்று குழந்தைகள் கடத்தல் நிகழ்வுகள், எண்ணூர், நாகை,



திருநெல்வேலி பாலியல் வன் கொடுமைகள், கோவையில் ஜாதி வன்கொடுமையால் மாணவர் தற்கொலை, போதை மருந்துக் கடத்தல்கள், போதை கும்பலுக்கிடையே வன்முறை – கொலை என செய்தித் தாள்களையும், தொலைக்காட்சிகளையும் திறந்தாலே இவைதான் பேசப்படுகின்றன. கடத்தல்களில் போதை மருந்து கடத்தல் போல, குழந்தைகள் கடத்தலும் தொடர்கிறதே!

இதனிடையே புழல் சிறையிலிருந்து இரு கைதிகள் தப்பியோடி, பின்னர் பிடிபட்டனர் என்றொரு செய்தி. அடுத்த சில நாட்களிலேயே நேற்று முன் தினம் (26.10.2026) தேனி கிளைச் சிறையிலிருந்து 17 கைதிகள் தப்பியோடியுள்ளனர். அவர்களில் பலரைப் பிடித்துவிட்டதாகக் காவல் துறை தெரிவித்தாலும், உயர் பாதுகாப்பு கொண்ட சிறைகளிலிருந்து, தப்புகின்ற அளவுக்கு எங்கே ஓட்டைகள் இருக்கின்றன?

சிறைத் துறை அமைச்சருக்குப் பொல்லாங்கு பேசுவதற்கே பொழுது சரியாகி விடுகிறது.

ஏதோ அறையில் அடைத்து வைக்கப்பட்டவர்கள் தப்பியது போன்று ஓர் அதிகாரியை அடித்துவிட்டுத் தப்பினார்கள் என்று செய்தி வருகிறது. இதுதான் சிறைகளில் இருக்கும் பாதுகாப்பா? என்னும் கேள்வி சாதாரண மக்கள் மத்தியிலேயே எழுந்துள்ளது.

மக்களோ அன்றாட வாழ்க்கை குறித்த அச்சத்தில் ஆழ்ந்துள்ளனர். விலைவாசி பல மடங்கு உயர்ந்து, அதுவேறு புறம் அச்சுறுத்துகிறது.

ஓர் அரசுக்கு அழகு!

புதிதாக ஆட்சிப் பொறுப்பேற்றிருக்கும் முதலமைச்சருக்கும், அமைச்சர்களுக்கும் அனுபவம் இல்லாமல் இருக்கலாம். ஆனால், அனுபவம் வாய்ந்தவர்களை அருகில் அமர்த்திக் கொண்டு, ஆலோசனை பெற வழிகள் இருக்கின்றன. துறை சார்ந்த அதிகாரிகள், திறமை வாய்ந்தவர்கள், ஓய்வு பெற்றவர்கள் எத்தனையோ பேர் உண்டு. அவர்களையெல்லாம் பயன்படுத்திக் கொள்வதுதான் ஓர் அரசுக்கு அழகு!

முதலமைச்சர் மட்டும் பார்க்க வேண்டிய அன்றாட, அவ்வப் போதைய உளவுத் துறை அறிக்கையை, வேறு யார், யாரோ பார்க்க, கேட்டதும், பொறுப்புள்ள கடமை அதிகாரி தரத் தயங்கி நிலையில், முதலமைச்சரே, மற்றவர்களிடம் கொடுத்துவிடுங்கள் என்று சொன்னதாகவும் செய்திகள் உலா வருவது, ஆளுமைக்கு, ஆட்சிக்கு அழகா? அரசியல மைப்புச் சட்ட மரபு மீறியதாகாதா?

ஆய்வு நடத்துகிறோம் என்று ஆங்காங்கே செல்வதும், மக்கள் மத்தியில் 'ரோட் ஷோ' நடத்துவதும், அதற்குப் பல கோடி ரூபாய் செலவு செய்வதும் மக்களுக்கு எந்தப் பயனையும் தரப் போவதில்லை.

ஆட்சி நடத்துவதற்குத் தான் மக்களில் ஒரு பகுதியினர் ஆதரவளித்துத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். வெறும் காட்சிகளுக்காக இல்லை என்பதை ஆள்வோர் புரிந்துகொள்ள வேண்டும்.

மடைமாற்றத் தந்திர வித்தைகளால் மக்கள் ஏமாந்துவிட மாட்டார்கள்!

இந்தப் பிரச்சினைகளில் இருந்தெல்லாம் செய்தி ஊடகங்களைத் திசை திருப்பு, வேறு வேறு பிரச்சினைகளை முன்னிறுத்துவதும், முன்னாள் அமைச்சர்கள் கைது, அவதூறு வழக்குகள், விசாரணைகள், ரெய்டுகள் என்று சாயமடிக்கும் வேலையைச் செய்வது மக்களுக்கான சரியான பரிகாரம் அல்ல. கைது செய்வதன் மூலம் அவர்கள் குற்றவாளிகள் என்ற எண்ணத்தை மக்களிடம் விதைத்துவிடலாம் என்று யாராவது கருதினால் அல்லது பழிவாங்கும் நடவடிக்கையாக இத்தகைய மடைமாற்றத் தந்திர வித்தைகளால் மக்கள் ஏமாந்துவிட மாட்டார்கள்.

உண்மையான பல பிரச்சினைகளால் மக்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை மேலும், கவலையில் ஆழ்த்தும் வகையில் ஆட்சியாளர்கள் அலட்சியமாக, ஆணவமாக இருப்பது கண்டனத் திற்குரியது. சட்டம் – ஒழுங்கைக் கட்டுக்குள் வைத்திருப்பதும், மக்களின் நலன்களையும், பாதுகாப்பையும் உறுதி செய்வதும்தான் ஓர் அரசின் முதன்மைக் கடமை அல்லவா?

அந்தக் கடமையைச் சரிவரச் செய்யாமல், திசை திருப்பல்களின் மூலமே காலத்தைக் கடத்தலாம் என்று கருதினால், அது பெரும் அரசியல் பிழையாகும்.

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை விடுத்துள்ளார்.

மாற்றுத்திறனாளிகளுக்கான கட்டணமில்லாப் பேருந்துப் பயணச் சலுகை எல்.எஸ்.எஸ்., எக்ஸ்பிரஸ் உள்ளிட்ட பேருந்துகளுக்கு விரிவாக்கம்!

வெற்றியை கழகத் தலைவரின் கரங்களில் சமர்ப்பிக்கிறோம்!

தி.மு.க. மாற்றுத்திறனாளிகள் அணியின் செயலாளர் பேராசிரியர் டி.எம்.என். தீபக் அறிக்கை!

சென்னை, அக். 30–

தி.மு.க. மாற்றுத் திறனாளிகள் அணியின் செயலாளர் பேராசிரியர் டி.எம்.என்.தீபக் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–

ஒருவழியாக, மாற்றுத்திறனாளிகள் சாலைக்கு வந்து போராடி, தங்களது உரிமைக்காகக் குரல் எழுப்பி, கண்டனங்களைத் தெரிவித்து, பல்வேறு இன்னல்களையும் வேதனைகளையும் தாங்கிப் போராடியதன் விளைவாக, மாற்றுத்திறனாளிகளுக்கான கட்டணமில்லாப் பேருந்துப் பயணச் சலுகையை எல்.எஸ்.எஸ்., எக்ஸ்பிரஸ் உள்ளிட்ட பேருந்துகளுக்கும் விரிவுபடுத்தி அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

இது திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாற்றுத்திறனாளிகள் அணிக்குக் கிடைத்த மிகப்பெரிய வெற்றியாகும்.

இத்திட்டம் அறிவிக்கப்பட்ட நாள் முதல், அது முறைப்படி



நடைமுறைக்கு வந்த காலகட்டம் வரையிலும், மாற்றுத்திறனாளிகளுக்கான பேருந்துப் பயணச் சலுகையை விரிவுபடுத்த வேண்டும் என்ற கோரிக்கையைத் தொடர்ந்து வலியுறுத்தி வந்தோம்.

இந்தக் கோரிக்கையை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்காக முரசொலி நாளிதழில் கட்டுரைகளை வெளியிட்டோம். பத்திரிகைச் செய்திகள், நேர்காணல்கள் மற்றும் பல்வேறு அரசியல் நடவடிக்கைகள் வாயிலாக மாற்றுத்திறனாளிகளின் நியாயமான கோரிக்கையைத் தொடர்ந்து முன்னெடுத்தோம்.

தொடர்ச்சியான இந்த முயற்சிகளுக்குப் பிறகே தற்போது இந்த அரசாணை வெளியாகியுள்ளது. மாற்றுத்திறனாளிகளின் உரிமைக்காகத் தொடர்ந்து குரல் கொடுத்து, அவர்களின் கோரிக்கையை அரசியல் தளத்தில் முன்னெடுத்துச் சென்ற திமுக மாற்றுத்திறனாளிகள் அணியின் செயல்பாட்டிற்குக் கிடைத்த வெற்றியாகவே இதைக் கருதுகிறோம்.

மாற்றுத்திறனாளிகளின் போக்குவரத்து உரிமை என்பது வெறும் கட்டணச் சலுகை தொடர்பான கோரிக்கை மட்டுமல்ல. அது அவர்களின் கல்வி, வேலை வாய்ப்பு, மருத்துவம், சமூகப் பங்கேற்பு மற்றும் சுதந்திரமான வாழ்க்கை ஆகியவற்றுடன் தொடர்புடைய முக்கியமான உரிமையாகும்.

இந்தக் கோரிக்கையைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதிலும், மாற்றுத்திறனாளிகளின் குரலை உரிய அரசியல் தளங்களில் ஒலிக்கச் செய்வதிலும் திமுக மாற்றுத்திறனாளிகள் அணி உறுதியுடன் செயல்பட்டு வருகிறது.


இந்த வெற்றியைத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரான ஐயா மு.க. ஸ்டாலின் அவர்களுக்குச் சமர்ப்பிப்பதில் பெருமை கொள்கிறோம்.

திமுக மாற்றுத்திறனாளிகள் அணியின் செயலாளர் என்ற முறையில், இந்த வெற்றியை எங்களது கழகத் தலைவர் ஐயா மு.க. ஸ்டாலின் அவர்களின் பொற்பாதங்களில் பெருமையுடனும் நன்றியுடனும் சமர்ப்பிக்கிறேன்.

மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளுக்காக எங்களது குரல் தொடர்ந்து ஒலிக்கும். அவர்களின் நியாயமான கோரிக்கைகள் நிறைவேறுவதற்கான எங்களது அரசியல் பயணமும் உரிமைப் போராட்டமும் தொடர்ந்து நடைபெறும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

ஆண்டியும் போண்டியும்



ஆண்டி : ஏன்ய்யா; ஆவடி மாநகராட்சி கூட்டத்தில் அடிக்கடி கரண்டு ஆப் ஆன போது, அங்கிருந்த கவுன்சிலர்கள் எல்லாம் விசில் அடித்தார்களாமே!

போண்டி : **ஆமாய்யா; ஒரே விசில் சப்தம்தானாம். மின்வெட்டுன்னா உடனே ஞாபகம் வர்றது த.வெ.க.தானே! 'கலெக்ஷன் குமார் தானே! அதான் அவங்க கட்சிச் சின்னமான விசிலை ஊதியிருக்காங்க. நிலைமை எப்படிப் போகுது பார்த்தியா.**




நேற்று (29.10.2026) பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா அவர்களை, நியூசிலாந்து, கிறிஸ்ட்சர்ச் நகரின் மேயர் ஃபில் மாகர் (Mr. Phil Mauger-Mayor of Christchurch) அவர்கள், தலைமையிலான குழுவினர் மரியாதை நிமித்தமாக சந்தித்து, இரு நகரங்களுக்கு இடையேயான ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு வாய்ப்புகள் குறித்து கலந்துரையாடினர். இந்நிகழ்வில் மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ். சமீரன், நியூசிலாந்து, கிறிஸ்ட்சர்ச் நகரின் துணை மேயர் திருமதி விக்டோரியா ஹென்ஸ்டாக் (Mrs. Victoria Henstock) மற்றும் குழுவினர் உடனிருந்தனர்.

---

169 அ வட்டப் பொருளாளர் டி.கண்ணன் தலைமையில்

தீரன் தீனன் 49வது நினைவு நாள்!



சென்னை, அக். 30.

சென்னை தெற்கு மாவட்டம், சைதை கிழக்குப் பகுதி 169 அ வட்டக் கழகப் பொருளாளர் டி.கண்ணனின் மூத்த சகோதரரும் மொழிப்போர் தியாகியுமான தீனன் அவர்களின் நினைவு நாள் நிகழ்ச்சி இன்று நடைபெறுகிறது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆணையை ஏற்று, 1977 ஆம் ஆண்டு சைதை சின்னமலை ஹால்டா அருகில் நடைபெற்ற கறுப்புக் கொடி அறப்போராட்டத்தில் பங்கேற்று அன்றைய அரசு நடத்திய துப்பாக்கிச் சூட்டில் வீர மரணம் அடைந்த தியாக மறவர் பேன்பேட்டை தீரன் தீனனுக்கு இன்று (30.10.2026) 49வது ஆண்டு நினைவு நாளாகும். கழக மாவீரன் தீனனின் நனைவு நாளில் அன்னாருக்கு எங்களது அஞ்சலியை காணிக்கையாக்கிறோம்.

சைதை கிழக்குப் பகுதி 169 அ வட்டப் பொருளாளர், டி.தீனனின் இளவல் பேன்பேட்டை டி.கண்ணன் ஏற்பாட்டில் இன்று (30/10/2026) அன்னாரது படம் அலங்கரித்து வைக்கப்பட்டு, மலரஞ்சலி செலுத்தப்படுகிறது. இதில் கழகத்தினர் பங்கேற்று அஞ்சலி செலுத்து'கின்றனர்.

சந்தி சிரிக்கும் சட்டம் – ஒழுங்கு!

செயலற்ற விஜய் ஆட்சியில் கொலை, கொள்ளைகள்!

(28.10.2026)



1. சென்னை ஓட்டேரி இரட்டைமலை சீனிவாசன் தெருவில் குடிபோதையில் ஏற்பட்ட தகராறில் முதியவர் அடித்துக் கொலை.

2. திருப்பத்தூர் அருகே கந்திலியில் முன் விரோதம் காரணமாக முதியவர் இரும்புக் கம்பியால் அடித்து படுகொலை.

3. கிருஷ்ணகிரி மாவட்டம் காடியா பாளையம் அருகே பழைய வாகன வியாபாரி படுகாயங்களுடன் சடலமாக மீட்பு!

4. ஆவடி அடுத்த திருமுல்லைவாயிலில் குடிபோதையில் ஏற்பட்ட தகராறில் ரவுடி வெட்டிக்கொலை.



5. கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் அருகே 16 வயது சிறுமிக்குப் பாலியல் தொல்லை கொடுத்த டிபன் கடை உரிமையாளர் சிக்கினான்.

6. விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணைநல்லூர் அருகே தென்மங்கலம் கிராமத்தில் பள்ளிக்குச் சென்ற 11 வயது சிறுமியை கடத்த முயன்ற வாலிபர் சிக்கினான்.

7. சேலம் மாவட்டம் ஆத்தூர் அருகே மல்லி கரையில் 14 வயது சிறுமிக்குப் பாலியல் தொல்லை கொடுத்த ஆட்டோ டிரைவர் , போலீசில் புகார் அளித்ததால் பயந்து தற்கொலை.



8. நெல்லை மாவட்டம், இட்டா மொழியில் இன்ஸ்டாவில் இளம் பெண்ணுக்குத் தொல்லை கொடுத்த வாலிபருக்கு சரமாரியாக அறிவாள் வெட்டு.

9. மதுரை சமயநல்லூர் அருகே தேனூரில் மருதுபாண்டியர் குரு பூஜையில் ஏற்பட்ட தகராறில் வாலிபர் காது துண்டானது.

10. தூத்துக்குடி கந்தன் காலனி பகுதியில் பட்டப் பகலில் தனியாக வசித்து வந்த பெண்ணை சரமாரியாக வெட்டி நகை கொள்ளை.

11. சென்னை வடபழனி தனியார் மருத்துவமனையில் வேலை செய்யும் தூய்மைப் பணியாளர் வீட்டு பீரோவை உடைத்து 25 சவரன் நகை கொள்ளை.



12. சென்னை பெரியமேடு ரயில்வே குடியிருப்பில் அடுத்தடுத்து ஐந்து வீடுகளில் கொள்ளை. பணம் நகை மற்றும் மோட்டார் சைக்கிள்கள் திருட்டு.

13. சேலம் ஆட்டையாம்பட்டி காவல் நிலையத்தில் கொலை மற்றும் அடிதடி வழக்குகளில் தொடர்புடைய இரண்டு சரித்திரப் பதிவேடு குற்றவாளிகள் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்த அழைத்துச் சென்ற போது தப்பி ஓட்டம்.

14. சேலம் மகாத்மா காந்தி விளையாட்டு மைதானத்தில் மாநில அளவிலான தடகள விளையாட்டுப் போட்டி நிகழ்ச்சியில் தேசியக் கொடியை தலைகீழாக ஏற்றிய போக்குவரத்துத் துறை அமைச்சர் பார்த்திபன்.

15. கடலூர் மாவட்டம் வேடப்பர் கோவில் அருகே முப்பதாயிரம் ரூபாய் மதிப்புள்ள போதை மாத்திரைகள் ஆயிரக்கணக்கில் சிக்கின.

16. ராணிப்பேட்டையில் ஒரு வயது பெண் குழந்தை கடத்தல் த.வெ.க. நிர்வாகியான கார் ஓட்டுநர் உட்பட 5 பேர் கைது! குழந்தையை கடத்தி ஆந்திராவில் விற்பனை செய்த த.வெ.க. நிர்வாகி

லாலாப்பேட்டையைச் சேர்ந்த சேகர் பிரேமா தம்பதியின் ஒரு வயது பெண் குழந்தை மகேஸ்வரி கடத்தல்

கடந்த 23ம் தேதி இரவு தம்பதி சாலையோரம் உறங்கிக் கொண்டிருந்தபோது குழந்தை மாயம்.

தாய் பிரேமா அளித்த புகாரின் பேரில், சிப்காட் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

வெ. சுந்தரராஜன்

அக்டோபர் 30 (2021)



இளமைப் பருவத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு சென்னை இராதாகிருஷ்ணன் நகர் பகுதியில் பிரதிநிதி, பொருளாளர், அவைத்தலைவர் எனவும், தொடர்ந்து பகுதிச் செயலாளராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

வடசென்னை கூட்டுறவு சங்கத் துணைத் தலைவராகப் பொறுப்பு வகித்தவர்.

இலங்கை தமிழர் ஆதரவு போராட்டம், சட்டநகல் எரிப்பு போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப்போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.

கழகத் தலைவர் அவர்கள், "களத்தில் பம்பரமாய்ச் சுழன்று பணியாற்றும் நல்லதொரு தளகர்த்தரை கழகம் இழந்திருக்கிறது" என தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.